பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 10 வெள்ளிக்கிழமை 22.04.2022 கதிர் 62

## அடுத்த அமர்வு மே 4ஆம் திகதி

அடுத்த நாடாளுமன்ற அமர்வு மே 4 ஆம் திகதி நடைபெறும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று அறிவித்தார்.

ஏப்ரல் மாதத்துக்கான நாடாளுமன்ற அமர்வு இன்றுடன் முடிவடைகின்றது. இந்நிலையிலேயே அடுத்த கூட்டத் தொடருக்கான திகதி இடம்பெறவுள்ளது.

☞2

## மிருசுவிலில் ரயில் - பட்டா ரக வாகனம் விபத்து; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பரிதாபச் சாவு

**(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)**

யாழ்., கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் இன்று இடம்பெற்ற ரயில் - பட்டா ரக வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பரிதாபகரமாக சாவடைந்தனர்.

கொடிகாமம், தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த நாகமணி தயாபரன் (வயது 45), அவரின் மகன்களான தயாபரன் ஜனுசன் (வயது 12), தயாபரன் தனுஷன் (வயது 15) ஆகியோரே உயிரிழந்தனர்.

ஜனுசன் சம்பவ இடத்திலேயே பலியானார். அவரின் சகோதரரும் தந்தையும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

☞2



# கொலைகாரக் கோட்டாவை விரட்டும் வரை ஓயாதீர்கள்!



## மக்களிடம் சந்திரிகா வேண்டுகோள்

**கொலைகார ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு விரட்டும் வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும்.**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

☞2



## இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

மாத்தறை - கொஸ்கொட பகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவரின் சடலம் தெல்கஹ பிரதேசத்தில் காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தனிப்பட்ட பகையின் காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சுயாதீன எம்.பிக்கள் குழுவும் ‘21’ திருத்த வரைவு சமர்ப்பிப்பு



அரசிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் எம்.பிக்கள் குழு அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான யோசனை வரைபை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இன்று கையளித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விமல் வீரவன்ஸ அணி, உதய கம்மன்பில அணி

☞2

## பேராயர் தலைமையில் 60 பேர் பாப்பரசரை சந்திக்கப் பயணம்



கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில், 60 பேர்கொண்ட குழு, பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸைச் சந்திப்பதற்காக, வத்திக்கான் நோக்கிப் பயணமாகியுள்ளது.

இன்று காலை வத்திக்கான் நோக்கிப் பயணமான இந்தக் குழுவில், கொழும்பு ஆயர் இல்லத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்னாண்டோவும் அடங்குகின்றார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில்

☞2

## வடக்கிலிருந்து நேற்றும் 18 பேர் தமிழகம் பயணம்

### மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைப்பு



(ந.லோகதயாளன்)

மன்னார் கடற்பகுதி ஊடாக தமிழகம் - இராமேஸ்வரம் பகுதிக்கு நேற்று 18 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நீர்வேலிப் பகுதியை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நேற்று

☞2

## தமிழகத்தில் தஞ்சம் புகுந்தோரில் ஒருவர் இலங்கைப் பொலிஸ்காரர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.22

மன்னாரில் இருந்து தப்பி இன்று காலையில் தமிழகத்தைச் சென்றடைந்த 18 இலங்கைத் தமிழர்களில் ஒருவர் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிய வருகின்றது.

மன்னாரில் பணியாற்றிய நிலையில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் பணிக்கு சமுகம் கொடுக்காமல் இருந்தவரே இப்போது தமிழகத்தைச் சென்றடைந்துள்ளார்.

கிடைக்கும் சம்பளத்தில் வாழ முடியாதமையினால் தாம் தமிழகத்திற்குத் தப்பிச் செல்ல நேரிட்டதாக அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் தமிழகத்தில் தெரிவித்தார்.

மன்னார்

☞2

# நெருக்கடி நிலை விரைவில் நீங்கும்

### பிரதமர் மஹிந்த நம்பிக்கை



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைகள் விரைவில் நீங்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வேலைத்திட்டத்துக்குத் தொழிற்சங்கங்கள் வழங்கும் ஆதரவைப் பாராட்டுகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

☞2

## லிட்ரோ 12.5 கிலோ எரிவாயுவின் விலை இரு மடங்காக அதிகரிப்பு



லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, லிட்ரோ 12.5 கிலோ எடைகொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 5 ஆயிரத்து 175 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பானது இன்று நள்ளிரவு முதல் அமுலாகவுள்ளது.

முன்னதாக

☞2

## சுயாதீன எம்.பிக்கள் குழுவும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளிட்ட 11 கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த யோசனை வரைவை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த வரைபில் பிரதானமாக அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்றும், 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே தனது யோசனை வரைவை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளது. சஜித் அணி 21ஆவது திருத்த யோசனை வரைவை முன்வைத்துள்ள நிலையிலேயே அந்தத் திருத்தம் தொடர்பில் சபாநாயகரிடம் இரண்டாவது யோசனை வரைவும் கையளிக்கப்பட்டுள்ளது.

## நெருக்கடி நிலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முற்போக்கு தொழிற்சங்கங்களுக்கான தேசிய நிலையத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த காலங்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் எடுத்த தீர்மானங்களாலேயே தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என இதன்போது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே தற்போது அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

நெருக்கடியை உருவாக்குவதற்குப் பங்களித்தவர்கள் நிரபராதிகளாகி தற்போதைய அரசின் மீது சகல பழிகளையும் சுமத்துகின்றனர் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதன்போது பிரதமரிடம் சுட்டிக்காட்டினர் எனவும் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வடக்கிலிருந்து நேற்றும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மதியம் மன்னார் பேசாலை பகுதியில் இருந்து கடல் வழியாக இராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள சேராங்கோட்டை எனும் பகுதியைச் சென்றடைந்தனர்.

அதேவேளை, மன்னாரைச் சேர்ந்த நான்கு மாதக் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் நேற்றிரவு தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியைச் சென்றடைந்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவும், உணவுப் பொருள்கள் உள்ளிட்டவற்றுக்கான தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டில் தம்மால் வாழ முடியாத நிலையிலேயே இந்தியாவுக்கு வந்துள்ளனர் என்று விசாரணைகளின்போது அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுச் சென்ற 18 பேரையும் விசாரணைகளுக்கு உட்படுத்திய பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வாழ முடியவில்லை எனக் கூறி கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் நேற்று வரையில் 60 பேர் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குக் கடல் வழியாகச் சென்று தஞ்சமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் தஞ்சம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிலங்குளத்தைச் சேர்ந்த 5304 இலக்க பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மன்னாரில் பணியாற்றிய நிலையில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டார்.

தமக்கு வழங்கப்படும் 60 ஆயிரம் ரூபா சம்பளத்தில் வெளி மாவட்டத்தில் பணியாற்றுவதனால் தனது தனிப்பட்ட செலவாக உணவு உட்பட மற்றைய விடயங்களுக்கு 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டமையால், மிகுதிப் பணம் மனைவிக்கும் இரு பிள்ளைகளிற்கும் உணவிற்கே போதாமல் இருந்ததாக அவர் கூறுகின்றார். இதனால் தாம் பணியில் இருந்தும் விலகி தற்போது தமிழகத்திற்கு வந்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## லிட்ரோ 12.5 கிலோ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லிட்ரோ 12.5 கிலோ சமையல் எரிவாயுவின் விலை 2 ஆயிரத்து 675 ரூபாவாகக் காணப்பட்டது. இந்நிலையில், தற்போது, அதன் விலை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலையுயர்வானது தற்போது ரத்து செய்யப்பட்டதாக பிந்திய செய்தி கிடைத்துள்ளது.

## பேராயர் தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதிக்கப்பட்ட 30 பேரும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்க வேண்டும் எனப் பாப்பரசர் விடுத்த அழைப்புக்கு அமைய, குறித்த குழுவினர் வத்திக்கான் பயணமாகியுள்ளனர்.

## மிருசுவிலில் ரயில் - .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மிருசுவில் வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள ரயில் கடவையில் பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் பட்டா ரக வாகனத்தைச் செலுத்திச் சென்ற தந்தையும், அவருடன் பயணித்த இரு மகன்களும் உயிரிழந்தனர்.

## அடுத்த அமர்வு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மே 4 ஆம் திகதி பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெறும்.

தற்போது பிரதி சபாநாயகர் பதவியை வகிக்கும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, இன்றைய சபை அமர்வின் பின்னர் பதவியைத் துறக்கவுள்ளார்.

## கொலைகாரக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் 66ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தையொட்டி கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் துப்பாக்கி முனையில் அடக்க முயல்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. ரம்புக்கனை சம்பவத்தின் ஊடாகத் தான் கொலைகாரன் என்பதை ஜனாதிபதி மீண்டும் நிரூபித்துள்ளார்.

'கோ ஹோம் கோட்டா' என்ற கோஷத்துடன் கொழும்பு - காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு ஆதரவாக நாடு முழுவதும் மக்களின் போராட்டங்கள் வலுவடைந்துள்ளன.

இது ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் சர்வதேச அரங்கில் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதைப் பொறுக்க முடியாத கோட்டாபய அரசு, மக்களை வன்முறைக்கு இழுத்து அவர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை துப்பாக்கிமுனையில் அடக்க முயலும். எனவே, மக்கள் வன்முறையில் இறங்காமல் அமைதியாக - ஜனநாயக வழியில் தொடர்ந்து போராட வேண்டும். கொலைகாரக் கோட்டாபயவை வீட்டுக்கு விரட்டும் வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும் - என்றார்.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622

ENGLISH CLASSES
யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும்
திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாமலின் மனப்பால்

சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தில் அடுத்த தலைமுறைப் பிரமுகரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. தற்போது கொழும்பு காலிமுகத்திடலில் தன்னெழுச்சியாக கூடியிருக்கும் அரசு எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார். மேற்படி காலிமுகத்திடல் போராட்டம் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட இடம் எனவும், அவர்களில் பலர் தங்கள் நோக்கத்திலும் நேர்மையானவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அது உண்மைதான். அதற்கு அப்பால் அவர் கூறும் ஒரு விடயம்தான் வேடிக்கையானது.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தும் இந்த இளைஞர்களைச் சந்தித்து, அவர்கள் விடயத்தில் தலையிட்டு, தேர்தல் ஆணைக்குழுவுடன் பேசி, அவர்கள் மிதவாதக் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு சபாநாயகர் உதவவேண்டும் என்று நாமல் கொண்டிருக்கின்றார்.

இளைஞர்களின் இந்தப் போராட்டத்தை ஏனைய அரசியல் கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ஆடு நனைகின்றது என்று ஒநாய் கவலைப்பட்ட கதையாக இது உள்ளது.

திடீரென்று ஒரு கட்சியில் இருந்து பிரிந்து, அல்லது அதைப் பிளந்து, பதிவுசெய்யப்பட்ட இன்னொரு அரசியல் கட்சியைப் பெயருடன் பணம் கொடுத்து வாங்கி, பிற கட்சிகளையும் தரப்புக்களையும் பிளந்து, மொட்டுக் கட்சியை உருவாக்கிய தங்களது முன்னுதாரணத்தை மனதில் வைத்துதான் அவர் இப்படிப் பேசுகின்றார் போலும்.

அவரும் அவரது குடும்பத்தவர்களும் நாட்டை சூறையிட்ட கோபத்தில் கிளர்ந்து வந்துள்ள இந்த இளைஞர்களின் நோக்கம், தாங்கள் தனிப்பட்ட முறையில் அரசியல் அதிகாரத்திற்கு வருவதல்ல.

மாறாக, பிழையான கைகளில் வீழ்ந்திருக்கும் அரசியல் அதிகாரத்தை, நாட்டைக் கொள்ளையிடும் அந்த அரூபக் கரங்களில் இருந்து விடுவித்து, நாட்டின் எதிர்காலத்தை மீட்பது மட்டும்தான். அரசியல் அதிகாரத்தைத் தாங்கள் பிடிப்பதோ, தாங்கள் அரசியல் செய்வதோ அவர்களின் நோக்கம் அல்ல.

தம் இலக்கிலும், நோக்கிலும், போக்கிலும் தெளிவாக இருக்கும் அந்த இளைஞர்களிடையே அரசியல் அதிகார பதவி மோகத்தை மூட்டிவிட்டால், அவர்களின் இலக்கு –நோக்கு – ஐக்கியம் – சிதறிவிடும் என்று மனப்பால் குடிக்கிறார் நாமல் ராஜபக்ஷ.

இதுவரை காலமும் தாங்கள் நடத்தி வரும் மூன்றாம் தர அரசியல் சகதிக்குள் அந்த இளைஞர்களையும் –அந்தப் போராட்டக்காரர்களையும் – இழுத்து விழுத்தி விட்டால் தங்கள் ஊழல் பயணத்திற்கான பெரும் தடை நீங்கிவிடும் என்று அவர் கனவு காண்கின்றார் போலும்.

அந்த இளைஞர்களின் கருத்தியல் என்பது வெறுமனே அவர்களுடையது மட்டுமல்ல, முழு நாட்டிலும் பொருளாதார நெருக்கடியினால் அந்தரித்துக் கொண்டிருக்கும் அனைத்து இலங்கையர்களினதும் கருத்தியலின் பிரதிபலிப்புத்தான். வலிமையான இளைஞர் சக்தி தமக்குள் ஒருமுகப்பட்டு இன்று எழுச்சியாக அதனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அன்னா ஹஸாரேவின் இது போன்ற மக்கள் எழுச்சி போராட்டத்தினின்றும் முகிழ்ந்து எழுந்த அரசியல்வாதிதான் இன்றைய டெல்லி முதல்வர் கெஜ்ரிவால். துடைப்பத்தைத் தமது அரசியல் கட்சியின் சின்னமாக வைத்துக்கொண்டு இந்திய ஜனநாயக அரசியலின் அழுக்குகளை அகற்றுவதற்காக இன்று போராடி வருபவர்.

அவர் போன்ற பல கெஜ்ரிவால்கள் காலிமுகத்திடல் போராட்டக் களத்திலிருந்து எதிர்காலத்தில் முகிழ்கக் கூடும். ஆனால் அந்த எழுச்சி ஏதும் நாமல் ராஜபக்ஷ மனப்பால் குடிப்பது போல இந்தக் காலிமுகத்திடல் போராட்ட இலக்கை மாற்றி விடாது என்பது திண்ணம்.

## எம்மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள நாம் என்றும் தயாராகவே உள்ளோம்

### என்கிறார் நாமல்



2015 இல் நாங்கள் ஆடம்பர கார்கள் குதிரைகள் சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட 1,800 கோடி டொலர் போன்றவற்றை வைத்திருக்கின்றோம் என குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர், எனினும் யாராலும் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிரான எந்த ஊழல் மோசடி குற்றச்சாட்டு விசாரணையையும் எதிர்கொள்ள தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் என எதிர்க்கட்சியினர் மீண்டும் குற்றச்சாட்டுகளை சுமத்த ஆரம்பித்துள்ளனர். நாங்கள் எந்த விசாரணைகளையும் எதிர்கொள்ளத் தயார். எதிர்க்கட்சிகள் வெளிநாடுகளில் வழக்கு தாக்கல் செய்து பார்க்கட்டும்.

எதிர்க்கட்சிகள், ராஜபக்ஷர்கள் பொதுமக்களின் பணத்தை மோசடி செய்துள்ளனர். சட்டவிரோதமாக சேமித்த பணத்தை வெளிநாடுகளில் சேமித்து வைத்துள்ளனர் எனக் குற்றம்சாட்டியுள்ளனர். ஆட்சியில் இருந்தவேளை இதனை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை– என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கான கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லையினை நீடித்தது இந்தியா!

இலங்கைக்கான 40 கோடி டொலர் கடன் நாணயப்பரிமாற்ற கால எல்லை இந்திய மத்திய வங்கியால் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்தூதரகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கும் பன்முகப்படுத்தப்பட்டதும் தாராளமானதுமான ஆதரவு தொடர்வதாக உயர்தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கான 40 கோடி அமெரிக்க டொலர் நாணயப் பரிமாற்ற கால எல்லை இந்த ஆண்டு ஜனவரியில் நிறைவடைந்தது.

இந்த நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியால் தற்போதைய நாணயம் சார் ஆதரவாக, இந்தக் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பங்களாதேஸூம் 45 கோடி டொலர் பரிமாற்றக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கைக்கு மேலதிக கால அவகாசம் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நெருக்கடியிலிருந்து மீள முயற்சிகளுக்கு ஆதரவு

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கிய பாதையில் நாட்டை அமைப்பதற்கும் அதன் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா உறுதிபூண்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் தெற்கு ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, நிதி அமைச்சர் அலி சப்றி மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோருக்கு இடையில் வொஷிங்டனில் இடம்பெற்ற கலந்துரையாடலை சுட்டிக்காட்டியே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை தற்போது பேச்சு நடத்தியுள்ளமை முக்கியமானது என அமெரிக்க உதவிச் செயலாளர் டொனால்ட் லூ தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

மறுபுறம் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கான நிலையான தீர்வை நோக்கி இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியம் செயற்படுவதை அமெரிக்கா வரவேற்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பால் மாவின் விலைகளை மீளவும் அதிகரிக்க முடிவு!

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், அடுத்த வாரத்தில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர். சில இறக்குமதியாளர்களும் டொலர் நெருக்கடி காரணமாக சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் பால்மா அடுத்த வாரம் நாட்டுக்கு வரவிருக்கும் நிலையில், பங்குகள் வந்த பிறகு விலை அதிகரிப்பு தொடர்பாக முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு கிலோ பால் மாவின் விலையை 1,345 ரூபாவிலிருந்து 1,945 ரூபாவாகவும், 400 கிராம் பால் மாவின் விலை 540 ரூபாவிலிருந்து 800 ரூபாவாகவும் அண்மையில் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வெள்ளிக்கிழமை 22.04.2022

# நாளுக்கு நாள் மோசமாகும் நிலைமை

# உலக நாடுகள் அதிக கனரக ஆயுதங்களை வழங்க உக்ரைன் அதிபர் வலியுறுத்தல்



உக்ரைனுக்கு மேலும் 6 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான ராணுவ உதவிகளை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில், உலக நாடுகள் அதிக கனரக ஆயுதங்களை அனுப்புமாறு உக்ரைன் அதிபர் வலியுறுத்தியுள்ளார். உக்ரைன் தலைநகர் கீவ் வந்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சேஸ், டென்மார்க் பிரதமர் மெட் டே பிரடெரிக்சன் ஆகியோர் அதிபர் ஜெலன்ஸ்க்கியை சந்தித்து பேசினர். 3 பேரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்த போது, உக்ரைனுக்கு 200 மெற்றிக் தொன் ஆயுதங்களை கப்பலில் அனுப்பிவைத்துள்ளதாக ஸ்பெயின் பிரதமர் தெரிவித்தார். டென்மார்க் பிரதமர், 686 கோடி ரூபா மதிப்பிலானஆயுதங்களைவழங்குவதாக அறிவித்தார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்க்கி பேசும் போது, மரியுபோல் நகரின் ஒருபகுதியில் இன்னும் தங்கள் படைகள் உள்ளன. உங்களுக்கு தெரிந்தபடி நிலைமை கடினமாகவும், மோசமாகவும் உள்ளது. அது மாறவில்லை என்று நம்புகிறேன். அரசு பணியாளர்கள், பொதுமக்கள், முக்கியமாக பெண்கள் உள்பட பல ஆயிரக்கணக்கான மக்களை அங்கிருந்து வெளியேறவிடாமல் ரஷ்ய படைகள் தடுத்து நிறுத்துகின்றனர். எங்கள் கணிப்புகளின்படி கிட்டத்தட்ட 1 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் மரியுபோலில் சிக்கிக் கொண்டுள்ளனர் என்று கூறினார். இதனிடையே உக்ரைனுக்கு மேலும் 6 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான ஆயுதங்களை வழங்குகிவேன் என அமெரிக்க அதிபர் பைடன் அறிவித்துள்ளார்.

மரியுபோல் நகரை முழுவதுமாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம் என கூறுவது கேள்விக்குறியாக உள்ளதாகவும் பைடன் தெரிவித்துள்ளார். அடைக்கலம் தேடும் உக்ரேனியர்கள், ஐரோப்பிய நாடுகளில் இருந்து நேரடியாக அமெரிக்கா வரும் புதிய திட்டத்தை பைடன் அறிவித்தார். இந்நிலையில் தங்கள் மீது மேற் குலக நாடுகள் விதித்த தடைகளுக்கு தொடர்ந்து பதிலடி கொடுத்து வரும் ரஷ்யா, அமெரிக்க துணை உள்ளிட்ட 29 அமெரிக்கர்களுக்கு பயணத்தடை விதித்துள்ளது.



அரியணை ஏறி 70 வருடங்கள்

## ‘பிளாட்டினம் ஜூப்ளி’ கொண்டாடும் இங்கிலாந்து ராணி எலிசபெத்

இங்கிலாந்து ராணியாக எலிசபெத் அரியணை ஏறி 70 ஆண்டு ஆன நிலையில் ‘பிளாட்டினம் ஜூப்ளி’ கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து ராணி எலிசபெத் (96) கடந்த 1952ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி தனது தந்தையான ஜார்ஜின் மறைவுக்கு பின்னர் அரியணை ஏறினார். இந்த பதவிக்கு வந்து 70 ஆண்டுகள் நிறைவு பெறும் வகையில் வரும் ஜூன் முதல் வாரத்தில் ‘பிளாட்டினம் ஜூப்ளி’ கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக லண்டனில் உள்ள பிரபல கடைகளான ஹரோட்ஸ், செல்ப்ரிட்ஜஸ், ஹம்லிஸ் போன்ற கடைகளில் ராணி எலிசபெத்தின் உருவ பொம்மைகள் விற்பனை அதிகரித்துள்ளன. பிரபல பொம்மை தயாரிப்பு நிறுவனமான மேட்டல், 70 ஆண்டுகாலம் ஆட்சி செய்த பிரிட்டிஷ் ராணியை கௌரவிக்கும் வகையில் ராணி வடிவில் பார்பி பொம்மைகளை (பார்பி டால்) தயாரித்து வெளியிட்டுள்ளது. அந்த பொம்மையானது மினியேச்சர் மொடலில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீல நிற ரிப்பன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும், ராணி எலிசபெத் தனது திருமண நாளில் அணிந்திருந்த கிரீடமும் பொம்மையில் வடிவமைக்கப்பட்டு அலங்கரித்துள்ளனர். இந்த பொம்மையின் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

# ரஷ்யாவுக்கு முதல் பிரமாண்ட வெற்றி மரியுபோல் நகரை கைப்பற்றியது



உக்ரைனில் இரண்டு மாதம் கடுமையான போராட்டத்திற்கு பின் மரியுபோலை ரஷ்யா கைப்பற்றி உள்ளது. இங்குள்ள இரும்பு தொழிற்சாலையின் பதுங்கு குழியில் இருந்து ஈக்கள் கூட தப்பக் கூடாது என அதிபர் புடின் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார். உக்ரைனுக்கு எதிரான முதற்கட்ட போரில் முறையான திட்டமிடல், ஒருங்கிணைப்பு இல்லாததால் பின்வாங்கிய ரஷ்ய படைகள், 2ஆம் கட்ட போரில் முதலில் இருந்தே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். குறிப்பாக, கருங்கடலில் நிறுத்தப்படிருந்த தனது நாட்டின் மிகப் பெரிய போர்க் கப்பலை உக்ரைன் ராணுவம் அழித்ததாலும், தனதுநாட்டுஎல்லைக்குள் புகுந்து உக்ரைன் ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தியமையாலும் ரஷ்ய அதிபர் புடின் கொதித்தார்.

உக்ரைனின் எல்லா வளங்களையும் நாசமாக்கி, முக்கிய நகரங்களை கைப்பற்றி உக்ரைன் வீரர்களை சரணடைய வைக்கும்படி ராணுவத்துக்கு அவர் உத்தரவிட்டார். அதன்படி, கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் உள்ள டான்பாஸ் பிராந்தியம், துறைமுக நகரமான மரியுபோல், தலைநகர் கீவ், கார்கிவ், லிலிவ் போன்ற உக்ரைன் முழுவதும் உள்ள நகரங்களில் வர்த்தக துறையில் முக்கிய பங்கு வகிக்கும் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் ராணுவ ஆலைகள் மீது அதிரடி தாக்குதல்களை ரஷ்யா நடத்தி வருகிறது. முதற்கட்ட போரில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே குறிவைத்து முன்னேறிய ரஷ்யா, தற்போது ஒரே நேரத்தில் நாட்டின் முக்கிய நகரங்களின் மீது ஏவுகணை, குண்டு மழை பொழிந்து வருகிறது.

மேற்கு நாடுகள் என்னதான் ஆயுத உதவிகள் கொடுத்தாலும், பலமிக்க ஆயுதங்களை கொண்ட ரஷ்யாவின் வான், தரை வழித் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் உக்ரைன் திணறுகிறது. இதை நிரூபிக்கும் வகையில், மரியுபோல் நகரத்தை ரஷ்யா நேற்று முழுமையாக கைப்பற்றி தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. இரண்டு மாதமாக விடாமல் மரியுபோலை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வந்த ரஷ்யாவுக்கு இது முக்கிய வெற்றியாக பார்க்கப்படுகிறது.

மரியுபோலின் முக்கிய அடையாளமாக கருதப்படும் அசோவ்ஸ்டல் இரும்புத் தொழிற்சாலையில் உள்ள பதுங்கி குழியில் ஆயிரக்கணக்கான மக்களும், உக்ரைன் வீரர்களும் பதுங்கி இருந்தனர். அவர்கள் சரணடைய கெடு விதித்தும் சரணடையவில்லை. முதலில் தொழிற்சாலையை தரைமட்டமாக்க நினைத்த புடின், பின்னர் தொழிற்சாலையை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்த மட்டும் உத்தரவிட்டார். தற்போது, இந்த தொழிற்சாலையை தவிர மரியுபோலில் அனைத்தையும் ரஷ்யா கைப்பற்றி உள்ளது.

ரஷ்ய படைகளின் வெற்றி மரியுபோலின் விடுதலை என்று ரஷ்ய அதிபர் புடின் பாராட்டி உள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், ‘தொழிற்சாலையில் உள்ள சுரங்கத்தில் 2,000 உக்ரைன் வீரர்கள் பதுங்கி உள்ளனர். அவர்களுக்காக தொழிற்சாலையில் ஏறி பதுங்கி குழிக்குள் ஊர்ந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. ஒரு ஈ கூட தப்பிக்க முடியாதபடி இந்த தொழிற்சாலையை சுற்றி ரஷ்ய படைகள் முற்றுகையிட்டு தடுக்க வேண்டும்’ என்றார்.

### உக்ரைன் பொருளாதாரம் காலி

உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோல் ராணுவம் மற்றும் பொருளாதாரம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஐரோப்பாவின் பெரிய இரும்புத் தொழிற்சாலையும் இங்குதான் உள்ளது. குறிப்பாக, உக்ரைனின் எரிபொருள் உள்ளிட்ட அனைத்தும் மரியுபோல் வழியே ஏற்றுமதி நடந்தது. தற்போது, ரஷ்யா கைப்பற்றி உள்ளதால், ஏற்றுமதி முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

### ஒரு பக்கம் போர்... ஒரு பக்கம் பள்ளி...

மரியுபோலில் ஒரு பக்கம் போர் நடந்து வரும் நிலையில், மறுபக்கம் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

ரஷ்யா வசமான மரியுபோலில் உள்ள பகுதிகளில் பள்ளிகள் திறக்கப்பட்டன. அங்கு ரஷ்ய பாடத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ரஷ்யா வசமான பகுதிகளில் 60 வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் பிடிபட்ட இங்கிலாந்து போராளிகளுக்கு உணவு, தண்ணீர் மற்றும் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் கிரெமின்னாவைக் கைப்பற்றிய ரஷ்யா, தற்போது ரூபிஸ்னே, போபாஸ்னா நகரங்கள் மற்றும் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளை கைப்பற்ற தீவிர சண்டையிட்டு வருகிறது.

ரஷ்ய மற்றும் உக்ரைன் அதிபரை அவர்களின் நாட்டின் தலைநகரங்களில் சந்தித்து போர் நிறுத்த குறித்து பேச விரும்புகிறோம் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் கடிதம் எழுதி உள்ளார்.

கீவ் பிணவறைகளில் 1,020 பொதுமக்கள் உடல்கள் இருக்கின்றன என உக்ரைன் அதிகாரி தெரிவித்துள்ளார்.

போருக்கு பின்னர் உக்ரைனில் இருந்து 50 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் என ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் சென்றுள்ள ஸ்பெயின், டென்மார்க் பிரதமர்கள், கீவ்வில் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேச்சு நடத்தினர்.

மரியுபோல் நகரை சுற்றி உள்ள கார்கிவ், டான்பாஸ் பிராந்தியத்தில் உள்ள டோனெட்ஸ்க் பகுதி மீது தீவிர குண்டுவீச்சு நடந்து வருகிறது.

டான்பாசில் உள்ள லுஹான்ஸ்க் பிராந்தியத்தின் 80 சதவீத பகுதிகளை ரஷ்யா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரினதும் விடுதலைக்கான கோப்புகள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளன என தமிழக அரசு தகவல்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரின் விடுதலை தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதில், ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் விடுதலை செய்யக்கோரிய நளினியின் மனு மீது விசாரணை நடத்தப்பட்டது.

இந்த வழக்கின் வாதத்தின்போது, தமிழக அரசு சார்பில் தகவல் பதிவு செய்யப்பட்டது. அப்போது, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரின் விடுதலை குறித்த கோப்புகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழக அரசு தெரிவித் துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி அன்று அவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டன என சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல் வழங்கியுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், இந்த வழக்கு மீதான விசாரணையை வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தர விட்டது.

## கர்நாடக மாநிலத்திலும் ஆம் ஆத்மி ஆட்சி மலரும்

### அரவிந்த் கெஜ்ரிவால் உறுதி



டெல்லி முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால், கர்நாடக மாநிலத்தில் தனது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

பெங்களூரு தேசியக் கல்லூரி மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், டெல்லி, பஞ்சாப் மாநிலங்களைத் தொடர்ந்து கர்நாடகாவிலும் ஆட்சி அமைப்போம், என உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

கர்நாடக பா.ஜ.க. அரசாங்கத்தின் மீது மாநில ஒப்பந்த தாரர்கள் சங்கம் கூறும் ஊழல் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடும் வகையில், தற்போதுள்ள '40 சதவீத' அரசாங்கத்தை, கவிழ்க்க விவசாயிகள் அமைப்புகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று கெஜ்ரிவால் கேட்டுக் கொண்டார்.

இந்த அரசாங்கங்களின் 20 மற்றும் 40 சதவீத கமின் கணக்குகளை நாம் மூட வேண்டும். ஊழல் இல்லாத அரசாங்கத்தினால் மக்களுக்கு பல்வேறு சேவைகளை இலவசமாக வழங்க முடியும், என்றும் கெஜ்ரிவால் கூறினார்.

## இந்தியாவுடன் மற்றொரு தடையற்ற வர்த்தக உடன்படிக்கை பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் நம்பிக்கை தெரிவிப்பு

குஜராத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தியாவுடன் மற்றொரு தடையற்ற வர்த்தக உடன்படிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் கையெழுத்தாகும் என நம்புகிறேன் என அவர் கூறியுள்ளார். எதேச்சதிகாரங்களை எதிர்க்கும் ஜனநாயக நாடுகளான இந்தியா – பிரிட்டன் இரண்டும் ஒருங்கிணைந்து செயல்படும், என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு தடையற்ற வர்த்தக உடன்படிக்கைக்கு ஈடாக, இந்தியாகளுக்கு அதிக விசாக்களை வழங்கத் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.



## கொடநாடு கொலை வழக்கில் உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டுமென தினகரன் வலியுறுத்தினார்



மதுரையில் நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் சென்றிருந்தார். அங்கு மதுரை உள்ளாட்சித்தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகள் அவரை சந்தித்தனர். அதனைத்தொடர்ந்து ஊடகவியலாளர்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறையில் உள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் விடியல் வராது. மக்கள் ஏமாறுவர் என்று நாங்கள் தேர்தல் நேரத்தில் பிரசாரம் செய்தோம். தி.மு.க ஆட்சி என்றாலே தமிழகத் திற்கு இருண்டகாலம் என்பது வரலாறு. தி.மு.க. ஆட்சி தவறான பாதையில் சென்று கொண்டு இருக்கிறது. தேர்தல் வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப் படவில்லை, என்று அப்போது டி.டி.வி. தினகரன் குற்றஞ் சாட்டினார். ஜெயலலிதா விரும்பிச் சென்று வந்த இடம் கொட நாடு. அங்கு நடந்த கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகளை பொலிஸார் கண்டுபிடிக்க வேண்டும்.

சித்திரைத் திருவிழாவில் கூட்ட நெரிசல் காரணமாக இரண்டு உயிர்கள் பலியாகி உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு சித்திரை திருவிழா நடந்ததால் அதிக கூட்ட நெரிசல் ஏற்பட்டு உள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகம் இது போன்ற அசம்பாவித நிகழ்வுகள் நடக்காமல் கவனமாக இருந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் எதிர்க்கட்சி என்பதற்காக எல்லா விடயங்களுக்கும் ஆளுங்கட்சியை குறை சொல்ல வேண்டியது இல்லை.

அதி.மு.கவை கைப்பற்றுவதற்காகவே அ.ம.மு.க தொடங்கப்பட்டு உள்ளது. கட்சியை கைப்பற்றுவது என்றால் யானை, குதிரை படைகளோடு சென்று அபகரிப்பது அல்ல. ஜனநாயக முறைப்படி தேர்தலில் வெற்றி பெற்று அ.தி.மு.கவை கைப்பற்றுவோம். இழந்ததை மீட்டு எடுப்போம். அப்போது தான் ஜெயலலிதா ஆட்சியை தமிழகத்தில் மீண்டும் நிலை நிறுத்த முடியும்.

கடந்த கால தேர்தல் தோல்விகளை கடந்து தமிழக மக்களின் ஆதரவோடு, அ.தி.மு.கவை மீட்டெடுக்கும் பணிகளை செய்து வருகிறோம். ஜனநாயக ரீதியாக தேர்தலில் வெற்றி பெற்று அ.தி.மு.கவை கைப்பற்றிசசிகலாவைபொதுச் செயலாளர் ஆக்குவோம், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## 5 வருடங்களில் மட்டும் 1,500 சட்டங்கள் அகற்றல்

### பிரதமர் மோடி அரச அதிகாரிகளுக்கு தெரிவிப்பு

இந்தியாவின் 15ஆவது குடிமுறை அரசுப்பணி தினத்தை முன்னிட்டு அரசு அதிகாரிகளின் மத்தியில் பிரதமர் மோடி உரையாடினார்.

நாம் என்ன செய்தாலும் அது உள்ளூர் அளவிலும், கிராம அளவில் பயன் தரும் நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும் தான் நமது நாட்டின் முதன்மையான விடயமாக கருத வேண்டும். நாம் எந்த அமைப்பை உருவாக்கினாலும், எந்த முடிவை எடுத்தாலும் அது நமது ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துமா என்று உங்களுக்கு நீங்களே கேள்வி கேளுங்கள்.

இந்தியா தான் முதலில், தேசம் தான் முதலில் என்று நமது பணிகள் இருக்க வேண்டும், என்று இந்த உரையின்போது மோடி தெரிவித்திருக்கிறார்.

மாறி வரும் காலத்திற்கு ஏற்ப நமது சமூக மன நிலையும் மாற வேண்டும். முன்பு இந்துக்கள் இறந்தவர்களின் உடலை கங்கைக்கரையில், சந்தனக் கட்டையில் எரியூட்டுவதையே விரும்பினர். இப்போது அவர்கள்தான் மின் தகன முறையை ஆதரிக்கின்றனர். இது தான் மாறும் சமூக மனநிலை என்பது. மாறி வரும் காலத்திற்கு ஏற்ப சட்டங்களும் மாற வேண்டும்.

நான் பதவியேற்ற முதல் 5 ஆண்டுகளில் காலத்திற்கு உதவாத சட்டங்களை நீக்கியுள்ளேன்.

இந்தியாவில் பல நூறு சட்டங்கள் மக்களுக்கு சுமையாக இருந்தன. நான் பிரதமரான பின்னர் முதல் 5 வருடங்களில் 1,500 சட்டங்களை அகற்றியுள்ளேன்.

இந்த 8 வருடங்களில் பல மாற்றங்கள் வந்துள்ளன. அனைத்தும் இந்தியர்களுக்கு உதவும் மாற்றங்கள், என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.






# ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக மட்டக்களப்பிலும் பிரார்த்தனையும் போராட்டமும்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கருகில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் ஆத்ம சாந்தி நினைவுப் பிரார்த்தனை நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

மலர்க் கொத்துகள் வைத்தும், சுடர்கள் ஏற்றப்பட்டும் சிவில் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களால் இந்த ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நடத்தப்பட்டது. இதன் போது பாதிரிமார்கள், முஸ்லிம் தமிழ் மக்கள் பங்கு கொண்டிருந்தனர். ஆத்மசாந்திப் பிரார்த்தனையையடுத்து கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கோரி அமைதிவழி கவனவீர்ப்பொன்றும் தூபிக்கருகில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த, மனித உரிமைச் செயற்பாட்டாளர் புஹாரி முகமட்–

அப்பாவி மக்களின் உயிர்களைச் சூறையாடி அதிகாரத்தில் குந்திக் கொள்ளவேண்டும் என்ற அரசியல் நோக்கோடு – அதிகார நோக்கோடு – இன்று அதிகாரத்தில் இருக்கும் இந்த அரசியல்வாதிகள்தான் இந்தத் தாக்குதலின் பின்னால்இருக்கிறார்கள் என்பதை நாங்கள் நன்றாக அறிந்திருக்கின்றோம். ஆனால், 3 ஆண்டுகள் ஆகியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எந்த ஒரு நீதியும், பெறப்படவில்லை. அவர்களுக்கானநீதியைப்பெற்றுக்கொள்வதில், நீதிக்காகப் போராடுகின்றவர்கள் பல்வேறு வகைகளிலும் துன்புறுத்தப்படுகிறார்கள். அந்தவகையில், நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துச் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெறவேண்டும். இந்த நாட்டில் பல்வேறு ஆணைக்குழுக்களை நிறுவி விசாரணைகளை மேற்கொண்டிருந்தாலும் அதனுடைய உண்மைத் தன்மைகள் அரசுக்கும் தெரியும், காரணம் அதனைச் செய்தவர்களும் அவர்களே.

ஆனால் அந்த உண்மையை பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சொல்லாமல், உண்மையை மறைத்து வேறு ஓர் இனவாதத்தினைத் துண்டிவிட்டு அதில் குளிர்காய்ந்து கொண்டிருக்கும் இந்த அரசியல்வாதிகளை, அரசியல் கதிரையில் இருந்து துரத்தும் வரைக்கும் ஒன்றுகூடுவோம் ஒருநாள் உண்மையை வெளிக் கொண்டுவருவோம். –என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் நினைவை ஒட்டி கல்முனையில் நேற்றுக் கவனவீர்ப்பு






(பாறுக் ஷிஹான்)

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு அன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையிலான பிரார்த்தனையுடனான கவனவீர்ப்புப் போராட்டம் கல்முனை மெதடிஸ்ட திருச்சபை வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இப்பிரார்த்தனையுடனான கவனவீர்ப்பு போராட்டத்தில் குண்டுத்தாக்குதலில் அருட் சகோதரிகள், அருட்சகோதரர்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இத்தாக்குதலில் இறந்தவர்களில் நினைவாகவும் உயிர்த்த ஞாயிறன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பிலும் இங்கு கருத்துரைகள் நிகழ்த்தப்பட்டன. இதன் போது கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன், பெரிய கல்லாறு மெதடிஸ்ட திருச்சபையின் அருப்பணி எஸ்.டி வினோத், கல்முனை மெதடிஸ்ட திருச்சபையின் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் ஆகியோர் இங்கு கருத்துரைகளை வழங்கிய பின்னர் அமைதியாக இக்கவனவீர்ப்புப் போராட்டம் நிறைவடைந்தது.



# ஓட்டமாவடி பகுதியில் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை ஆட்சேபித்து நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

கல்குடா சாரதிகள் சங்கம் ஏற்பாடு செய்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கல்குடா வான் சாரதிகள், ஓட்டோ சாரதிகள், டிராக்டர்கள் சாரதிகள் மற்றும் வர்த்தகர்கள், இளைஞர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை வெளிப்ப டுத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டம் ஓட்டமாவடி வான் தரிப்பிடத்தில் இருந்து ஓட்டமாவடி மேம்பாலம் வரை சென்று மீண்டும் வான் தரிப்பிடத்தில் முடிவடைந்தது.

போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசுக்கு எதிராக பதாதைகள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர். ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் உயிரிழந்த நபருக்கும் நினைவு கூரப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணி ஹபீப்றிபான், கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூர் ஆகியோர் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்தனர்.

# நஞ்சற்ற சூழல் நேய நெற்செய்கையை ஊக்குவிக்கும் செயன்முறை மண்டூரில்!

( காரைதீவு நிருபர் சகா)


விவசாயிகளுக்கான நஞ்சற்ற சூழல்நேயமானநெற்செய்கையை ஊக்குவித்தல் தொடர்பான ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் காலை மண்டூரில் இடம்பெற்றது.



மண்டூர் விவசாயப் போதனாசிரியர் பி.பிரமேந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு விவசாய திணைக்களத்தின் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் ரீ.மேகராசா, மண்டூர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன், பாலையடிவட்டை இராணுவ நிலைய பொறுப்பதிகாரி உட்பட்ட அதிகாரிகள், விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது சேதன நெற்செய்கையில் விளைச்சலை அதிகரிக்க விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவூட்டப்பட்டன. விரைவு முறையில் கூட்டெரு உற்பத்தி செய்யும் முறை, மீனமில கரைசல் தயாரிக்கும் முறை, திரவப் பசளை தயாரிப்பு, ஜீவாமிர்த கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் கருக்கிய உமி போன்ற செய்துகாட்டல்கள் விவசாய போதனாசிரியர்களான பி.சகாப்தன், எம்.எவ்.எம்.அப்ஸெல் றிப்கி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் ஆகியோரால் தெளிவான விளக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# போருக்கு எதிரான நிலைப்பாடுடைய ரஷ்ய வீரர்களை விளையாட அனுமதிக்க ஸ்விட்டோலினா கோரிக்கை



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், ஏற்கெனவே ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யவும் பிரிட்டன் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தடை விதித்துள்ளன.

இந்தச் சூழலில் லண்டனில் நடக்கும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் பங்கேற்க ரஷ்யா, பெலாருஸ் நாட்டு வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை காரணமாக உலகின் இரண்டாம் நிலையில் உள்ள ரஷ்ய வீரர் மெட்வடேவ் பங்கேற்க இயலாது என தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில் ரஷ்யா, அதற்கு ஆரவு வழங்கிய பெலாருஸ் ஆகிய இரு நாட்டு வீரர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இந்த முடிவு குறித்து உலகின் முன்னணி டென்னிஸ் வீராங்கனைகளுள் ஒருவரான எலினா ஸ்விட்டோலினா கருத்து தெரிவித்துள்ளார்.

அனைத்து ரஷ்ய வீரர்களும் விம்பிள்டன் போட்டியில் இருந்து தடை செய்யப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. உக்ரைன் போருக்கு எதிராக குரல் எழுப்பாதவர்களை மட்டுமே தடை செய்ய வேண்டும்.

ரஷ்ய வீரர்கள் வாய் திறந்து பேசவேண்டும். அவர்கள் ரஷ்யாவின் பக்கமா அல்லது இந்த உலகின் ஏனைய மக்கள் பக்கமா என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒருவேளை அவர்கள் போருக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினால் அவர்களை விளையாட அனுமதிக்க வேண்டும், என அவர் கூறியிருக்கிறார்.




## ஐ.பி.எல். தொடரில் மோசமான சாதனை புரிந்தது மும்பை இந்தியன்ஸ் அணி

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ், இந்த சீசனில் இதுவரை ஒரு வெற்றியைக்கூடப் பெறவில்லை தான் மோதிய 7 ஆட்டங்களிலும் தோல்வியையே அந்த அணி சந்தித்துள்ளது. இதன் மூலம் இந்த சீசனில் மும்பை அணி வெளியேறுவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

இந்த நிலையில் ஒரு சீசனில் தொடர்ச்சியாக முதல் 7 போட்டியில் தோல்விகளை சந்தித்த முதல் அணி என்ற மோசமான சாதனையை மும்பை புரிந்துள்ளது. இதற்கு முன்பு 2013 ஆம் ஆண்டில் டெல்லியும், 2019 இல் பெங்களூரு அணியும் தங்களது முதல் 6 ஆட்டங்களில் தொடர்ச்சியாக தோற்றிருந்தன.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அணியொன்று தொடர்ச்சியாக 7 தோல்விகளை சந்திப்பது 11 ஆவது முறையாக நிகழ்ந்துள்ளது. ஆனால், சம்பியன் பட்டம் பெற்ற அணியொன்று தொடர்ந்து 7 தோல்விகளைச் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

## மூன்று வருடங்களின் பின்னர் கால்பந்தாட்ட சம்பியன்ஸ் லீக்




இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய கால்பந்தாட்டத் தொடரான சம்பியன்ஸ் லீக் எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் அறிவித்தள்ளது.

இலங்கையின் பிரதான கால்பந்தாட்டத் தொடராக சம்பியன்ஸ் லீக் இருந்து வந்த நிலையில், கடந்த வருடம் சூப்பர் லீக் தொடர் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, தற்போது பல மாற்றங்களுடன் சம்பியன்ஸ் லீக் தொடர் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பு இந்தவாரம் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

14 அணிகளின் பங்கேற்புடன் இம்முறை இடம்பெறும் சம்பியன்ஸ் லீக் தொடர் எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் முதல் வாரம் வரை இடம்பெறவுள்ளதாகவும், இம்முறை தொடரில் அனைத்து அணிகளும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதுமெனவும், இதன்படி அனைத்து அணிகளும் தலா 13 போட்டிகளில் விளையாடவேண்டி வருமென்பதால் தொடரில் மொத்தமாக 91 போட்டிகள் இடம்பெறவுள்ளன என்றும் இந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் அனைத்தும் கொழும்பு சுகததாஸ அரங்கு, குருனாகலை மாலிகாபிட்டிய அரங்கு, கண்டி போகம்பரை விளையாட்டரங்கு என்பவற்றுடன் காலி மாவட்ட விளையாட்டரங்கு அல்லது மாத்தறை மைதானத்தில் என மொத்தமாக நான்கு மைதானங்களில் இடம்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லீக் போட்டிகளின் நிறைவில் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பெறும் அணி சம்பியனாகத் தெரிவாகும் என்றும், இம்முறை சம்பியனாகத் தெரிவாகும் அணிக்கு 10 லட்சம் ரூபா பணப் பரிசுடன் சம்பியன் கிண்ணமும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை தொடரிலும் 3 வெளிநாட்டு வீரர்களை ஓர் அணி ஒப்பந்தம் செய்து விளையாட முடியும். அதேபோன்று, 21 வயதின் கீழ் வீரர்கள் 3 பேர் ஒவ்வோர் அணியிலும் இணைக்கப்பட வேண்டும். அதில் குறைந்தது ஒருவர் கட்டாயமாக போட்டியின் முழு நேரமும் விளையாட வேண்டும் போன்ற தொடரின் நிபந்தனைகள் குறித்தும் அந்த ஊடகச் சந்திப்பில் விளக்கப்பட்டுள்ளது.




# சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இலங்கை இளம் வீரர் இணைப்பு

ஐ.பி.எல். 2022 கிரிக்கெட் தொடருக்கான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆடம் மில்னே இடம் பெற்றிருந்தார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான முதல் லீக் போட்டியில் தசைப்பிடிப்பு காயம் காரணமாக போட்டியின் இடையில் வெளியேறியிருந்தார்.

தற்போதுவரை அவருக்கு ஏற்பட்ட காயம் குணமடையாததால் ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்தும் அடம் மில்னே விலகியுள்ளார். சென்னை அணியில் அடம் மில்னேக்குப் பதிலாக இலங்கையின் இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷா பத்திரன சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதலையும் இனவாதத்தையும் மூலதனமாக வைத்து கைப்பற்றிய ஆட்சியை தக்கவைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் காட்டம்



கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் இனவாதம் தலைவிரித்தாடும், சிறுபான்மை சமூகங்கள் அச்சுறுத்தப்படுவர், மத உரிமைகள் பறிக்கப்படும் என்றெல்லாம் பிரசாரம் செய்து, மக்களிடம் வாக்குக் கோரிய முஷாரப், இஷாக் ரஹ்மான், அலி சப்றி ரஹீம் ஆகியோர் பின்கதவால் சென்று பேரம்பேசியதும், தங்களை மிக மோசமாக தூற்றிய இவர்களுக்கு, ஆட்சியாளர்கள் அமைச்சுப் பதவி வழங்கியதும் தரங்கெட்ட, வெட்கக்கேடான விடயம் எனத் தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், தனது கட்சியைநம்பி, இவர்களுக்குவாக்களித்த மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோருகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து இன்றுடன் மூன்று வருடங்கள் ஆகின்றன. இதனை வைத்து அரசியல் செய்யும் எவராக இருந்தாலும், அவர்களுக்கு இறைவன் ஒருபோதும் உதவி செய்ய மாட்டான். அவர்கள் நிச்சயமாக தற்காலிக வெற்றிகளை அடைந்தாலும், அவர்களால் நிரந்தரமான எந்த வெற்றியையும் பெற முடியாது என்பது நிரூபணமாகி வருகின்றது. ஈஸ்டர் தாக்குதலின் பிறகு, கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கத்தோலிக்க – முஸ்லிம் மக்கள் மத்தியிலே பிளவுகள் வந்துவிடக் கூடாது என்ற விடயத்தில் மிகவும் உறுதியாக இருந்து, நேர்மையாகவும் நடந்துகொண்டார் என்பதை இன்றும் நான் நன்றியுணர்வுடன் இந்த உயர்சபையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆனால், அன்றுஎதிர்க்கட்சியிலிருந்த அரசியல்வாதிகள் இன்று அமைச்சர்களாகவும், இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு மூலதனமாகவும் ஈஸ்டர் குண்டு வெடிப்பையும், முஸ்லிம் தலைமைகளையும், முஸ்லிம் புத்திஜீவிகளையும், உலமாக்களையும் ஒட்டு மொத்த சமூகத்தையும், இஸ்லாமிய மார்க்கத்தையும், நாங்கள் வணங்குகின்ற எமது இறைவனையும், நாங்கள் இதயங்களில் மேலாக வைத்திருக்கும் நபி (ஸல்) அவர்களையும் கேவலப்படுத்தியதோடு, குண்டுத் தாக்குதலுடன் எம்மைத் தொடர்புபடுத்தி, பெரும்பான்மை மக்களையும் எம்மையும் பிரிக்க நடவடிக்கை எடுத்தீர்கள். பெரும்பான்மை மக்களை மடையர்களாக்கி ஆட்சிபீடம் ஏறினீர்கள் என்ற உண்மையை, உலகம் இன்று அறிந்து வைத்துள்ளது.

எனவே, இந்தக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அநியாயமாக பாதிக்கப்பட்ட பலர் இருக்கின்றனர்.

அப்பாவி உயிர்களை இழந்த குடும்பங்கள் இன்னுமே வேதனையுடன் இருக்கின்றனர். இன்னும்பலர் சிறையில் வாடுகின்றனர். கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளரும் பொலிஸ்மா அதிபரும் இணைந்து, இரண்டே இரண்டு பேர் தான் நேரடியாக இந்தச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று கூறினார்கள். அவ்வாறு கூறியபோதும் முன்னூறுக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் இன்னும் சிறையில் வாடுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டின் பேரிலேயே, அவர்களைச் சிறையில் வைத்து கொடுமைப்படுத்துகின்றார்கள். அவர்களின் உறவுகள் சீரழிகின்றனர். இவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால், சிறையில் வாடும் அத்தனை பேரையும் சட்டமா அதிபர் பிணையில் விடுதலை செய்ய வேண்டும், அல்லது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் வழக்குகளை தொடர வேண்டும். இதைவிடுத்து, அவர்களை அநியாயமாக சிறையில் வைத்திருப்பது மிகப்பெரிய அநியாயம் என்பதையும் இந்த உயர் சபையில் தெரிவிக்கின்றேன். அதேபோன்று, இந்தக் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட எவராக இருந்தாலும் அவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டுகின்றேன்.

எனவே, இந்தச் சம்பவத்தை வைத்து, இன்னும் அரசியல் செய்ய நினைப்பவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் கூற விரும்புகின்றேன். இவ்வாறானவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கின்றார்கள். குடும்பம் இருக்கின்றது. மிகவும் குறுகிய காலமே உங்கள் வாழ்க்கையும் இருக்கப் போகிறது. எனவே, அற்பசொற்ப அரசியலுக்காக இந்தச் சம்பவத்தை நீங்கள் இனியும் பயன்படுத்தாதீர்கள். அவ்வாறு நீங்கள் செயற்பட்டால் உங்கள் அழிவுக்கு அதுவே காரணமாக அமைந்துவிடும் என்பதையும் நான் இங்கு தெரிவிக்கின்றேன்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் அழுத வண்ணமே வாழ்கின்றனர். தாக்குதலில் பாதிப்புக்குள்ளானவர்களும், அதன் பின்னர் குருநாகலிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்டவர்களும் மிகவும் துயரமான சூழ்நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சுமார் முப்பதுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்கள் தாக்கப்பட்டன. பௌஸுல் அமீர் என்ற அப்பாவி இளைஞர், அவரது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாரின் கண்முன்னே பதைக்க பதைக்க கொல்லப்பட்டார். காடையர்களின் வெறித்தனம் அவரது குடும்பத்தை நாசமாக்கியது. அவ்வாறான காடையர்கள் இன்றுவரை தண்டிக்கப்படவுமில்லை, சிறைப்படுத்தப்படவுமில்லை. இதன் பின்னர் வைத்தியர் ஷாபி மீது வீண்பழி சுமத்தியமையுடன், முஸ் லிம் சமூகத்தின் வைத்தியர்களை சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையை உருவாக்கினர். இந்த கேவலங்களை எல்லாம் எந்தவிதமான மனிதாபிமானமுமின்றி மேற்கொண்டனர். இரண்டு வருடங்களாகியுள்ள இந்த ஆட்சியில், உங்களால் இவற்றை நிரூபிக்க முடிந்ததா எனக் கேட்கின்றேன்?

பிரபலமான சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை 22 மாதங்கள் சிறையில் வைத்திருந்து, ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் வாயிலாக சேறு பூசினீர்கள். தினமும் பொய் கதைகளையும் புனைகதைகளையும் புனைந்து, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூலம் அபாண்டங்கள் சுமத்தினீர்கள். 22 மாதங்கள் வரை அவரை அநியாயமாக சிறைப்படுத்தி, அவரை பிணையில் விடுவித்திருந்த போதும், உங்களால் அவர் மீதான குற்றங்களை நிரூபிக்க முடிந்ததா என நான் கேட்கின்றேன்? அஸாத் ஸாலியை சிறையில் அடைத்தீர்கள். ஆனால், அவர் மீது எந்தவிதமான குற்றங்களையும் நிரூபிக்க முடியாமல்போய்விட்டது. இவ்வாறுதான் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை உங்கள் தேவைக்காக அரசியலாக்கி ஆதாயம் தேடினீர்கள். எனவே, தயவு செய்து இவ்வாறான பாவத்தை இனிமேலும் செய்யாதீர்கள்

புனித ரமழான் மாதத்தில் நடுநிசியில் என்னை கைது செய்தீர்கள். குழந்தைகளுடன் வீட்டில் இருக்கும்பொழுது சி.ஐ.டியினர் நுழைந்து என்னை அழைத்து சென்றார்கள். எதற்காக என்னை அழைத்து செல்கின்றீர்கள்? நான் என்ன குற்றம் செய்தேன்? என்று கேட்டபோது அதனைக் கூற முடியாது என்று சொல்லி, என்னை அழைத்து சென்று, 06 மாதங்கள் சிறைப்படுத்தினார்கள். நாடாளுமன்ற உறுப்பினரான என்னை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைத்து வைத்திருந்தார்கள். தொழுவதற்கு இடம் தரவில்லை. ரிகியூ செய்வதற்கு வசதிகள் செய்து தரவில்லை. பல நாள்கள் படுப்பதற்கு பாய் தரவில்லை. தலையணை இல்லை. இரவிலே தொழ வேண்டுமென்று கூறியபோதும் மாலை 6 மணிக்கு என்னை தனி அறையில் அடைத்து, மறுநாள் 6 மணிக்கே என்னை விடுவித்தார்கள். மஹ்ரிப், இஷா, தஹஜ்ஜுத், சுபஹ் ஆகிய தொழுகைகளைக் கூட தொழ முடியாத நிலை ஏற்பட்டது. 'அறையைத்திறந்துவிடுங்கள்' என நான் கெஞ்சியபோது அதற்கும் இடம்தரவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில், எனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், 'கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டுக்கு சரி இல்லாதவர். நாட்டைக் குட்டிச்சுவராக்கி விடுவார். அவர் இனவாத மூலதனத்தால் ஆட்சிக்கு வரத் துடிக்கிறார்' எனக் கூறி, அவருக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும், எங்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் தேர்தல் காலங்களில் பிரசாரம் செய்தனர். நான் உட்பட முஷாரப், இஷாக் ரஹ்மான், அலி சப்றி ரஹீம் ஆகியோர் மக்களிடத்தில் இதைக் கூறித்தான் வாக்குக் கேட்டோம். அவ்வாறான, எனது கட்சிக்காரர்களை எம்.பிக்களான பின்னர், நான் சிறையில் இருந்ததைப் பயன்படுத்தி, இருபதுக்கு வாக்களிக்க செய்தீர்கள். இப்போது வெட்கம் இல்லாமல் எனது கட்சிக்காரர்களை அழைத்து, அமைச்சுப் பதவியையும் வழங்கியிருக்கின்றீர்கள். அவர்களும் வெட்கம் இல்லாமல் அந்தப் பதவியைப் பெற்றுள்ளனர். எங்களது கட்சிக்கு வாக்களித்த மக்களிடம் நான் மன்னிப்புக் கேட்கின்றேன். எங்களையும் கட்சியையும் நம்பி, இவ்வாறான கயவர்களுக்கு எமது சமூகம் வாக்களித்தமைக்காக நான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கின்றேன். அவர்களை நான் இறைவனிடத்தில் ஒப்படைக்கின்றேன்.

ரம்புக்கனையில் நடந்த சம்பவத்தில் சமிந்த லக்ஷான் என்ற நபர், பொலிஸாரால் அநியாயமாக கொல்லப்பட்டுள்ளார். இது திட்டமிட்ட அரச பயங்கரவாதம். இதனை நானும் எனது கட்சியும் வன்மையாகக் கண்டிப்பதோடு, எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி அதிகரித்துள்ளது. சகல பொருள்களின் விலைகளும் விண்ணைத் தொட்டுள்ளன. மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீட்டிலே உணவு, பால்மா இல்லாத நிலையில் பெற்றோர்கள் வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நாம் அமைச்சராக இருந்த காலத்தில் இவ்வாறான கஷ்டங்கள் ஏற்படவில்லை. இப்போது இளைஞர்கள் நியாயம் கேட்கின்றார்கள். அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாயுங்கள். எனவே, பாதையிலே தமது உரிமைகளுக்காக, எதிர்காலத்துக்காக அமைதிப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு நாமும் எமது முழு ஆதரவை வழங்குகின்றோம்.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, தொடர்ந்தும் ஆட்சிக் கதிரையில் அமராமல், உடனடியாக பதவி விலகி, நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வழிவிட வேண்டும். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நிபுண ரணவக்கவின் வீட்டில் யானைக்குட்டி ஆர்ப்பாட்டத்தில் வெளிப்பட்டது உண்மை

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க வீட்டில் யானைக் குட்டி ஒன்றை வைத்திருக்கின்றமை தெரியவந்துள்ளது.

நிபுண ரணவக்கவின் வீட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்ட போதே யானைக் குட்டி அங்கு இருப்பதைக் காண முடிந்துள்ளது.

நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு எதிராகவும், அதற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில், மாத்தறை தெனியாய, கலுகல்ஹேன பிரதேசத்தில் உள்ள நிபுண ரணவக்கவின் வீட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

பிரதேச ஓட்டோ சாரதிகள் சங்கம், தனியார் பஸ் சாரதிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.



தெனியாய பஸ் நிலையத்திற்கு அருகில் இருந்து இவர்கள் பேரணியாகச் சென்றமையுடன் நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டிற்கு செல்லும் வழியில் போடப்பட்டிருந்த பொலிஸ் தடையையும் மீறி, அவர்கள் அங்கு சென்று வீட்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'திருடன்.. திருடன்... நிபுண திருடன்' என ஆர்ப்பாட்டகாரர்கள் கோஷங்களையும் எழுப்பினர்.

வீட்டிற்குள் எவரும் நுழைய முடியாதபடி வாயில் கதவு பூட்டப்பட்டிருந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க கொழும்பு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுண ரணவக்க, ராஜபக்ஷ சகோதரர்களின் சகோதரியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2022இல் வெளியிடப்பெற்றது.